**கவனிக்க.-** (i) இந்த வர்த்தமானி பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

(ii) 2021.06.11 ஆந் திகதிய 2232 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (ஆ), பகுதி I: தொகுதி III, பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ), பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2233 - 2021 ජූනි මස 18 වැනි සිකුරාදා - 2021.06.18

2233 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1344 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூன் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1343-B 82240-5,403 (2021/ 06)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## டச் லங்கா (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 82748) கூறப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கான முன்மொழிவு

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்படி 59 ஆம் பிரிவின் உப பிரிவு 2 இன் கீழ் டச் லங்கா (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 82748) கூறப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கான முன்மொழிவு*

டச் லங்கா (பிறைவேட்) லிமிற்றெற் (கம்பனி) இயக்குநர்கள் குழு அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரைக்க முடிவு செய்துள்ளதாக அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் மதிப்பிடப்பட்ட ரூபாயின் மூலதனம் எண்பத்தொரு மில்லியன் எழுபதாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூ. 81,070,500.00) பிரதிநிதித்துவப் படுத்தும் எட்டு மில்லியன் நூற்றி ஏழாயிரத்து ஐம்பது ரூபா (ரூ. 8,107,050.00) சாதாரண பங்குகள் ஐம்பத்து மூன்று மில்லியன் ரூபா (ரூ. 53,000,000.00) (5,300,000 பங்குகள்) குறிப்பிடப்பட்ட மூலதனமாக குறைக்கப்படும். பிரிவு 59 இன் விதிகளின்படி முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தில் பங்குதாரர்களின் அனுமதியைப் பெறுவதற்காக நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 144 இன் படி 2021, ஓகத்து 20 ஆந் திகதி பங்குதாரரின் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

* சட்டத்தின் பிரிவு 59 இன் படி சுற்றறிக்கைத் தீர்மானப்படி டச் லங்கா (பிறைவேட்) லிமிற்றெற் (PV 82748) மூலதனக் குறைப்புக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தை உருவாக்குவதற்காகக் கருதப்படும் நிறுவனத்தின் எந்தவொரு கடன் வழங்குநருக்கும் அல்லது எந்தவொரு நபருக்கும் ஆய்வு செய்து வழங்குவதற்காக நிறுவனத்தின் செயலாளரின் அலுவலகத்தில் நிறுவனம் ஒரு கடமையின் கீழ் உள்ளது. சாதாரண வணிக நேரங்களில் எண் 141/3, வோக்ஷோல் தெரு, கொழும்பு 2 இல் அல்லது கடமை ஆவணங்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப ஆய்வு செய்யலாம். (cbs@chart.lk).

டச் லங்கா (பிறைவேட்) (PV 82748) லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையினது கட்டளைப்படி, சார்ட் பிசினஸ் சிஸ்டம் (பிறைவேட்) லிமிற்றெற் செயலாளர்.

2021, யூன் 03.

6-279

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

கண்டி, மாபனாவத்துர வீதி, 153 ஆம் இலக்க இடத்தில் வதியும் விதான ஆரச்சிகே சீலவதி (இலங்கை தே. அ. அ. இல. 707061820V)' என்பவரை எனது அற்றோணி அதிகார தத்துவதாரராக நியமித்து கண்டி பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். கங்காநாத அவர்களால் எழுதிசான்றுப்படுத்தப்பட்ட 16822 ஆம் இலக்க மற்றும் 2017.12.12 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரம் வலுவிழக்கச் செய்து இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும், அந்த அற்றோணிப் பத்திரத்தை இல்லாமல் செய்தும் மற்றும் வலுவிழந்தும் மற்றும் சட்டத்தின் முன் எந்த விளைவும் சக்தியும் அற்ற ஆவணமாகும் என்பதை தற்போது மாலைத்தீவு குடியரசில், ஆதர்ன் ரிசோட்ஸ், 06 ஆவது மாடி, எச். துனியா பொடுதகுருபானு மகு, மாலே எனும் இடத்தில் வதியும் கபில ஹிரஞ்சன் பண்டார ஹேரத் ஆகிய (இலங்கை தே. அ. அ. இல. 681901027V மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N 5310095) நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

கபில ஹிரஞ்சன் பண்டார ஹேரத்.

2021, யூன் 9.

6-257

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.